RECEIVED 1980-1-7 SRI LANKA – JAFFNA LIBRARY PERIODICALS DIVISION

இன்று
[illegible] தயாரிப்பாளர்கள் ஆதரவில்
[illegible]
கோமாளிகள்
யாழ். வீரசிங்கம் மண்டபம்
மாலை 6-30 மணி.
டிக்கட்டுக்கள் மண்டப வாயிலில்.

பக்கங்கள் 8

ஈழநாடு The EELANAADU 50 சதம்

மலர் 21 மார்கழி 21 ஸபர் 16 இதழ் 327
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-1-80

## இம்மாத இறுதியில் ஜி. சி. ஈ. (சாதாரண) பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளிவருமெனப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ.

(5-ம் பக்கம் பார்க்க)

★ முதல்நாள் பதவியேற்பு; அடுத்த நாள் ரத்து உத்தரவு:

# திடீர் இடமாற்ற ரத்தின் மூலம் பாதிப்படைந்த அரச ஊழியர்

## "அகதிகள் போல் அவதியுறுகிறோம்"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வந்த 16 கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் கடமையைப் பொறுப்பேற்ற மறுநாள் கிடைத்த இடமாற்ற ரத்து அறிவித்தலினால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இடமாற்றச்சபையின் வருடாந்த இடமாற்றத்திட்டத்தின்கீழ் இங்குவந்த இவர்கள் ஜனவரி 2ம் தேதி பொறுப்பை ஏற்று யாழ் கல்வி இலாகாவில் கடமையாற்றிக்கொண்டிருந்த போது திடீரென 3-ம் தேதி இடமாற்ற ரத்து அறிவித்தல் கிடைத்தது. இதனால் அவர்கள் காரியாலயத்தை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டது.

### அரச அதிபரைச் சந்தித்தனர்

15 ஊழியர்களும் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமியை நேற்று முன்தினம் சந்தித்து தங்கள் நிலைமையை விளக்கியதைத் தொடர்ந்து அவரினால் தற்காலிக ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

தற்காலிக வரவு இடாப்பு ஒன்றில் அவர்கள் கையெழுத்திட்ட பின்னர், யாழ் கல்வி இலாகா ஆலோசனை மண்டபத்தில் இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

### பல கஷ்டங்களுடன்....

இவர்களுக்கு ஒரு மாதத்திற்கு முன்பதாகவே இடமாற்ற அறிவித்தல் கிடைத்ததாகவும் அதன்பின் யாழ்ப்பாணம் வரக் கடமைலீவு வழங்கப்பட்டதாகவும், ரயில் வாரண்ட் மற்றும் பிரயாண முற்பணம், வீட்டுத்தளபாடங்கள் கொண்டுசெல்ல லொறிவசதிகளும் செய்யப்பட்டதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் தாங்கள் வாடகைக்கு இருந்த வீட்டை ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து டிசம்பர் மாதத்துடன் காலிசெய்து யாழ்ப்பாணத்தில் பலத்த கஷ்டப்பட்டு விடு எடுத்துவிட்டதாகவும் பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் சேர்த்துவிட்டதாகவும் பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார்.

### வேலையைப் பொறுப்பேற்று

2ம் திகதி வேலையைப் பொறுப்பேற்றபின் 3ம் திகதி இடமாற்றம் ரத்து என்ற அறிவித்திருப்பது விசித்திரமாக இருப்பதாக மற்றொருவர் தெரிவித்தார்,

தங்களைப் போல யாழ். கச்சேரிக்கு இடமாற்றம் பெற்று

(8-ம் பக்கம் பார்க்க)

## இடமாற்ற ரத்து வாபஸ் பெறுக! தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(கொழும்பு)

இடமாற்றச் சபையினால் முடிவு செய்யப்பட்ட இடமாற்றங்களை அமுல் செய்ய வேண்டுமென்றும், இடமாற்ற ரத்து உத்தரவை வாபஸ் பெறவேண்டுமென்றும் கூட்டுத் தொழிற்சங்கங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அரசாங்க லிகிதர் சேவை சங்க யாழ். கிளையினர் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு இடமாற்ற ரத்து உத்தரவினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் நிலைமையை எடுத்துக்

(5-ம் பக்கம் பார்க்க)

## மதுரையில் பொலிஸ் துப்பாக்கிக்கு இருவர் பலி!

மதுரை, ஜன. 4

மதுரையில் இன்று தேர்தல் பிரசாரத்தின் போது இரு அரசியல் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலைஅடுத்துபொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொலையுண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதலில் 103பேர்காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 33 பேர் பொலிசார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த பொலிஸ் அதிபர் திரு. செல்வராஜ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது 4 கட்சி முகாம்கள் தீயிடப்பட்டன என்றும் கல்லெறி, சோடாப்போத்தல் வீச்சு ஆகியன இடம்பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து பொலிசார் தடியடி, கண்ணீர் புகைப்பிரயோகம் செய்தும் நிலைமை கட்டுக்கடங்காததை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

## இடமாற்ற ரத்து இது ஒரு மனிதாபிமானப் பிரச்னை என்கிறார் அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

இடமாற்றரத்து அறிவித்தலினால் பாதிக்கப்பட்ட 16 ஊழியர்களின் நிலைமை பற்றி யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சக்குஅறிவித்துள்ளார்.

இவர்கள் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வுகாண்பதற்கான நடவடிக்கையை அரசாங்கஅதிபர் மேற்கொண்டார்.

அரசாங்க அதிபரைச் சந்தித்த பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் குழுவிடம், "இது ஒரு மனிதாபிமானப் பிரச்னை" என்று அரசஅதிபர் கூறினார்.

கல்விக் கந்தோரில் கையெழுத்திட உடன் தாம் ஏற்பாடுசெய்வதாகவும் அவர்கள் நிலைமைபற்றி மேலிடத்திற்கு உடன் அறிவிப்பதாகவும், அரசாங்க அதிபர் அக்குழுவினரிடம் தெரிவித்தார்.

## "யாழ். அரச அதிபரின் நடவடிக்கை பலனளித்தது"

(யாழ்ப்பாணம்)

இடமாற்ற ரத்து உத்தரவினால் பாதிக்கப்பட்டவர்கள் நிலைபற்றி அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ்.கிளையினர் நேற்று முன்தினம் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு விளக்கிக் கூறினர்கள்.

அரசாங்க லிகிதர்சேவைச் சங்க யாழ். கிளைச் செயலாளர் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் சென்ற இக்குழுவினர் அரசாங்க அதிபரைச் சந்தித்தனர்

அரசாங்க அதிபர் எடுத்த உடன்நடவடிக்கையால் பாதுகாக்கப்பட்ட அரசாங்க ஊழியர் யாழ். கல்வி இலாகாவில் அனுமதிக்கப்பட்டதாகவும், புறம்பான பதிவு ஏட்டில் கையெழுத்திட ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், அரசாங்க லிகிதர்சேவைச் சங்க யாழ் கிளையினர் தெரிவித்தனர்.

அரசாங்க அதிபர் பாதிக்கப்பட்ட ஊழியர் பற்றி மேலிடத்துடன் தொடர்பு கொண்டு அறிவித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (க)

## இளைஞர் பேரவை தீர்மானம்: கூட்டணி இன்று கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் இன்றுகாலை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் தெல்லிப்பளை அலுவலகத்தில் நடைபெறுகிறது.

புதிய ஆண்டில் முதன் முதலாக நடைபெறும் இக்கூட்டத்தில் முக்கியமாக இன்றுள்ள அரசியல் நிலைமைபற்றியும், தமிழ் இளைஞர் பேரவை அண்மையில் நிறைவேற்றிய கண்டனத் தீர்மானம் குறித்தும் ஆராயப்படுமெனத் தெரிகிறது.

எதிர்பார்க்கப்படும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றியும், அது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலை எப்படியிருக்குமென்றும் பலவிதமான ஹேஷ்யங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

தூய வெண்மை தருவது சஞ்ஜீவி சோப் வகைகள்




உடலிலும் உரோமத்திலும் வியாதிகள் ஏற்படாதிருக்க பெனின் மெடிகேடட் சசோப்பை பாவியுங்கள்.




தயாரிப்பாளர் :-
பெனின்சுலா சவர்க்கார தொழிலகம்
9, கண்டி வீதி நாவற்குழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. M B/650

ஆறுமுகம் வேலுப்பிள்ளை கைம்பெண் கற்பகம்,
செட்டித்தெரு, நல்லூர்.

வழக்காளி

எதிராக

1. சுப்பிரமணியம் பூபாலசிங்கம் பெண்
2. இந்திராதேவி, இல. 17/14, புதுறோட்,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M B/650-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு தை மாதம் 29-ந் திகதி (29-1-80) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணிக்கு ஏலவிற்பனையை நடாத்த நியமித்துள்ளேன்,

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 6,000/-வும் மேலும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 564/- கொடுக்க வேண்டியிருப்பதாலும்,

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சுண்டிக்குளி இறை.

''முதலைக்குளம்புலம்'' நிலப்பரப்பு 3 குளி 6 இதில் மேற்குப்பக்கமாக சீதனம் கொடுத்த நில. பர. 1 குளி 9 நீக்கி மிகுதி நில. பர 1 குளி 15, இதில் மேற்குப் பக்கமாக நில. பர. 1 குளி 4¾யும் கிணறும் இந்த நில பர ஒன்று குளி நாலரைக்கும் (நில பர. 1 குளி 4¾) எல்லை கிழக்கு வயிரமுத்து சின்னையா பெண் நாகேஸ்வரியின் ஆதனம், வடக்கு பிள்ளையினார் சுந்தையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு விசயரத்தினம் பெண் தனலட்சுமியின் ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதன் கிழக்கெல்லைக் காணிக்கு இக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்காற் பாவிப்புரித்தும் புறநீக்கலாக இதடங்கலும் (முற்பதிவு டி 436/37)

**சி. செ. பாலசிங்கம்,**
கொமிஷனரும் மதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
27-12-79. 4565

---

# கோட்டு விற்பனவு விளம்பரம்

1. சு. த. பாலச்சந்திரனும் பெண்
2, பாமியும் இருவரும் தற்போது
அரசினர் வைத்தியசாலை, மதவாச்சி.
3. இறந்துவிட்டவர் சங்கரப்பிள்ளை தம்பிஐயா.
உடுவில்.

வழக்காளி

இல. ஈடு 12665

எதிராக

1. இராமலிங்கம் வேலாயுதமும் பெண்
2. ராஜினி அரியமலரும் இருவரும் கைதடி.
3. தில்லையம்பலம் சுப்பிரமணியமும் பெண்
4. இராசமணியும் இருவரும், கோப்பாய்.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/12665-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1980-ம் வருஷம் ஜனவரி மாதம் 21-ந் திகதி (21-1-80) திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் முன் கைதடியிலும் பின் கோப்பாயிலும் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 63?3/75ம் 23-7-71 தொடக்கம் 4-5-78 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 9% வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் ?44/12,

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று கைதடி இறை ''குருந்தான்புலம்'' நி. பர. (11) பதினொன்று. இதில் கிழக்குப் பக்கமாக நி. பர. (7) ஏழு. எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு மிகுதியாதனம், தெற்கு பகாலிங்கம் பெண் செல்வரத்தினத்தின் ஆதனம், இவ்வெல்லைக்குள் சேர்ந்த நிலம், செய்பயிர் வான்பயிர் வீடுகளடங்கவும் தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் அதற்குச் சேர்ந்த தவைகளைத்திலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலில் பாவிப்புரித்தும்.

2. மேற்படி வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கிறை ''கற்புலம்'' நி. பர. (3) மூன்று எல்லை கிழக்கு எங்களில் இரண்டாம் பெயரில் (இராஜினி அரியமலரின்) ஆதனம், வடக்கு இராமலிங்கம் பெண் சவுந்தரமணியின் ஆதனம், மேற்கு பூதத்தம்பி பொன்னையாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு சுப்பிரமணியம் பெண் சோதிப்பிள்ளையின் ஆதனம் இதடங்கலும் இதற்கும் தென்கிழக்குப்பக்கமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

**ஜே. ஏ. எட்வேட்,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை. 4560

---

# வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அச்சகத்திற்கு கொம்பசிட்டர்ஒருவர், பிளேட்மெசின் மைன்டர் ஒருவர் உடன்வேண்டும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4566, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4566

### அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. ரூபா 250/- வைப்புப் பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் 8-1-80-ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி. ப. 2-30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் ''சாக்கு கேள்விப் பத்திரம்'' எனக் குறிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 8-1-80-ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி. ப. 4-00 மணிக்கு சங்க உபசபையின் முன்னிலையில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்,**
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்.
3-1-80. 4570

---

த. சண்முகராஜா
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
கோண்டாவில்

### விண்ணப்ப அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்டநீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் உரும்பராயைச் சேர்ந்தவரும், ரெலோக்குரு லொறேங் எண் 47ம் இலக்கத்தில் வசித்தவருமான காலஞ்சென்ற ஐயம்பிள்ளை செல்லையா பெண் (கார்த்திகேசு பெண்) இலட்சுமி என்பவரின் மரண சாதன விடயத்திலும்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல, 3509

1977ம் ஆண்டின் 20-ம் இலக்க குடியியல் நடைமுறைச் சட்டத் (திருத்தச்) சட்டத்தின் 554 பிரிவின் கீழ் வெளிநாட்டு மரணசாதன சுத்துவ பத்திரத்தை அங்கீகரிப்பதற்கும் கீழ் இலச்சினையிடுவதற்குமான விண்ணப்பத்தின் விடயத்திலும்

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி சிங்கப்பூர் மாவட்ட நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மரணசாதன தத்துவப்பத்திரத்தின் விடயத்திலும்

யாழ்ப்பாணம் உரும்பராய், ஐயம்பிள்ளை செல்லையா மகள் திருப்பதி

மனுதார்.

இவ் விண்ணப்பம் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குப் பின் மேற்குறிப்பிட்ட மரண மெய்தியவரின் மரணசாதன விடயமாக 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி சிங்கப்பூர் மாவட்ட நீதிமன்றத்தால் ஒப்பேற்றப்பட்ட 1977ன் 288ம் இலக்க மரண சாதனத் தத்துவப்பத்திரம் 1977-ம் ஆண்டின் 20ம் இலக்க குடியியல் நடைமுறைச் சட்டத் (திருத்த) சட்டத்தின் 554 பிரிவின் கீழ் இந் நீதிமன்றத்தால் இலச்சினை இடுவதற்காக ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1979ம் ஆண்டு மார்கழி மாதம் 18ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்

தயாரித்தது:
த. சண்முகராஜா
ஆதாரின் பதிவு பெற்றநொத்
4561

---

### விற்பனைக்கு

புதிதாக ஆரம்பிக்க இருக்கும் அலுமினியப் பாத்திரத் தொழிற்சாலை ஒன்றிற்கு கீழ்க் குறிப்பிடும் வேலையாட்கள் தேவை. தொழில் நுட்ப ஆலோசகர் (TechnicalAdviser) அனுபவமுள்ள தொழிலாளர்கள் (Experience workers) விண்ணப்பக் கடிதங்களை விளம்பர இல: 4558, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும். 4558

---

நல்ல நிலையிலுள்ள 185 CD Twin 8 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய ஹொண்டா [HONDA] விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்: K. நடராஜா, இல: 7 பஜார் லேன், யாழ்ப்பாணம். 4563

---

### பொங்கல் விருந்தாக ''நெஞ்சுக்கு நீதி''

(கொழும்பு)

ஈழத்து தமிழ்த் திரைப்படமான ''நெஞ்சுக்கு நீதி'' பொங்கல் பரிசாக வெளிவரவிருக்கிறது.

தமிழகத் திரை நடிகர் ஸ்ரீகாந்த் நடிக்கும் இப்படத்தில் ஈழத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த ஏராளமான கலைஞர்கள் பங்கு கொண்டுள்ளனர். திருமதி மாலினி சோமசேகரன் தயாரித்துள்ள இப்படத்தைச் சுண்டுக்குளி சோமசேகரன் டைரக்ட் செய்துள்ளார்.

### புதிய தலைவர்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக முன்னாள் மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். மார்க்கண்டு ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராக திரு. ஜே. பி. அருமைநாயகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(கு)

---

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, ஈடு / 14694

1. சுப்பிரமணியம் கனகராசாவும் பெண்
2. ருக்குமணியும்-சிறுபிட்டி

வழக்காளி

எதிராக

1. விசுவநாதர் முத்து மகள் நவமணி
2. முத்து நவரத்தினம்
3. முத்து சிவலிங்கம்- இல: 303, பலாலிறோட்டு,
திருநெல்வேலி கிழக்கு-யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/ 14694-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1980-ம் ஆண்டு ஜனவரி 18உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் முன்னர் அந்த இரண்டாம் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 6500/-ம் 6-1-75 தொடக்கம் 1-7-76 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 14% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 % வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 656 / 80ம் இதில் ரூபா 193 - நீக்கி.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை. ''செம்மண் கிடங்கு'' நி. பர. 2 பதிவு D 178/181. ஷெ ''செம்மண் கிடங்கு'' நி. பர, 1-ம் குளி 16 இரு வகையும் கூடி ஒரே காணியாக நி. பர. 3-ம் குளி 16-ம் வீடும் பயிர் வகைகளும் வடக்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும். ஆனல் ஷெ கிணற்றில் இக்காணிக்கூடாக தெற்கெல்லைக்காரருக்குரிய பங்கைப் பாவிப்பதற்கு வழமையான பாதை வழிவாய்க்கால் பாவிப்புரித்து புறநீங்கலாக. இதற்கு எல்லை கிழக்குறோட்டு, வடக்கு அன்னலிங்கம் பெண் செல்லம்மாவின் உரிமைக்காரருக்கும் சண்முகநாதனுக்குமுரிய ஆதனம். மேற்கு முத்தையா பெண் தையல் முத்துவுக்கும், சண்முகநாதனுக்கும் விநாசித்தம்பி வேலுப்பிள்ளைக்குமுரிய ஆதனம், தெற்கு விசுவநாதர் கதிரவேலுவுக்கும் விசுவநாதர் கனகரத்தினத்துக்குமுரிய ஆதனம். இடங்களும்.

2. ஷெ இறை ''உடையாள் தோட்டமும் மறு பிரிவுகளும்'' நி. பர. 4ம் பயிர் வகைகளும். எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் சிவக்கொழுந்துவினுதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு இராசையா மகள் புவனேஸ்வரியினுதனம், தெற்கு பரமநாதர் பெண் தில்லைப்பிள்ளையினுதனம். பதிவு D 185/103

**ஜே. ஏ. எட்வேட்,**
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
1-12-79. 4559

---


# நாளை

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
மாலை 6-30 மணிக்கு
செம்பியன் பட்டாசுகள்
தயாரிப்பாளர்கள் ஆதரவில்
மரிக்கார் ராம்தாஸின்

## இறேஸி கோமாளிகள்

டிக்கட்டுகளை
கௌரி டெக்ஸ்டயில்ஸ்
155 - 156, நவீன சந்தையில்
உடனடியாகப் பெற்றுக்கொள்ளுங்கள். (4568)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எங்களுக்கு எங்கள் பிழைகளைக்காணவிருப் பமில்லை. ஆனால் மற்ற வர்களிற் பிழைகாண்ப தில் மகிழ்கிறோம். இப் பழக்கத்தால் அதிகம் துன்பம் உண்டாகிறது.

- காந்திமகான்

## மக்கள் கருத்து

### ஈழநாடு தந்த புத்தாண்டுப் பரிசு!

ஆண்டுதோறும் வாசகருக்கு 'ஈழநாடு' அன்புடன் நல்கி வரும் புத்தாண்டுப் பரிசைப் பெற்றுக் குதூகலிப்பதுவழக்க மாகிவிட்டது. இவ்வாண்டு எதிர்பாராதவிதமாகஇரட்டிப் புக் குதூகலத்தை அன்பு 'ஈழ நாடு' தனது புத்தாண்டுப்பரி சாக வாசகருக்குத் தந்துள் ளது.

நமக்குள்ளே போட்டி- இவ் வாண்டு 'ஈழநாடு' பஞ்சாங் கத்தில் இடம் பெறப்போகும் பெரியார் யார் என்று! நூற் றாண்டு கண்டுள்ள நாவலர் பெருருமானுக்கே பல வாக்கு கள் கிடைத்தன! ஆனால் சற் றுமே எதிர்பாராதபடி பஞ் சாங்கத்தில் அன்னை திரேசா அவர்கள்பொன்னுகைப் பொறிக் கப்பட்டுள்ளது கண்டு குதூக லிக்கின்றோம். வெகு கெட்டித் தனமாக மிகவும் பொருத்த மாக அன்னை திரேசாவைக் கௌரவித்து பஞ்சாங்கத்தில் இடம்பெறச் செய்த 'ஈழநாடு' நிர்வாகத்துக்கு எமது மன மார்ந்த அன்பையும் பாராட் டையும் தெரிவிக்கின்றோம். 'ஈழநாடு' பஞ்சாங்கத்தில் அன்னை திரேசாவைப் பார்க் கும்தோறும், 'அன்னை' யாரா கவே காட்சிதந்து இதயத்தில் ஒரு நற்தன்மையை ஊட்டுகின் றார் அருள்புரியும் 'அன்னை' யார் சேவை மேலும் மேலும் உலகுக்கு நீள எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துவோமாக.

**செல்வி. ஐ. சேனாதிராசா**
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

### உலக இந்து மகாநாடு

இந்து சமய, இந்து கலாச்சார மகாநாடு ஒன்று 1980ம்ஆண்டு நடைபெற இருப்பதாகச் செய் திகள் வந்து கொண்டிருக்கின் றன. அப்படி ஒரு மகாநாடு நடப்பது உலக இந்துக்களுக்கே பெருமை தருவதாகும். இந்த அரசு தமிழர்களுக்கு வழங்கும் உரிமைகள் பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இந்துசமய, இந்துகலா சார அமைச்சு எனப்புதிதாக ஓர் அமைச்சை நிறுவி உலக இந்துக்களையே கௌரவித்துள் ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அமைச்சர் இராசதுரைநடக் திய ஆலோசனைக்கூட்டம் ஒரு மாநாடுபோலவே காட்சியளித் தது. நாடெங்கிலுமிருந்து வந்த 700க்கு மேற்பட்ட பிரதி நிதிகள் கதிரேசன் மண்ட பத்தை நிறைத்துவிட்டார் கள். இந்துக்கள் சிறுபான்மை யினராக வாழும் தெற்குமாகா ணங்களிலிருந்து வந்த துடிப் புள்ள இளைஞர்களும், வடக்கி லிருந்து வந்தசைவச்சான்றோர் களும் ஆலோசனைகளை அள்ளி வழங்கினார்கள். இந்த ஆண்டு நடைபெறப்போகும் உலக- இந்து சமய-கலாசாரமகாநாடு எப்படி அமையப்போகிற தென்பதைச் சுருக்கமாகவிளக் குவதுபோல ஆலோசனைக்கூட் டம் அமைந்திருந்தது. அத்தனை சிறப்பாக நிகழ்ச்சிகள் கோவைப்படுத்தப்பட்டிருந் தன. பலரும் பாராட்டினர்.

இவ்விதமாக ஏனைய அமைச் சர்களும், நிதியமைச்சர் கூட நாட்டில் உள்ளபொருளாதார வல்லுனர்கள், தொழிலதிபர் கள், தொழிலாளர்கள், குடும் பப்பெண்கள், விவசாயிகள் முதலியோர் அடங்கிய ஓர் ஆலோசனைக் கூட்டத்தினைக் கூட்டி ஆலோசித்துத் தமது வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தால் நலமாயிருக்குமே என்று அறிவுரை வழங்கினர். அப்படி நடந்தாலும்ஆச்சரியப் படுவதற்கில்லை. அதற்கும் வழி காட்டி அமைச்சர் 'இராசு' தானே!

**மாதினிசிறி**
யாழ்ப்பாணம்.

### சுடுதண்ணீரும் நோயாளிகளும்

யாழ். பெரியாஸ்பத்திரியில் பார்வையாளர் நேரத்தில் சுடு தண்ணீர் பெறுவது பெரும் கஷ்டமாக உள்ளது.

அங்குள்ள தேநீர்ச்சாலையில் ஒரு பொயிலரில் ஒரே நேரத் தில் ஒருவர் தேநீரும்கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் சுடுதண்ணீரும் கொடுக்க வேண்டும். பார்வையாளர் நேரத்தில் அதிகமானோர் நோயாளருக்கு சுடுதண்ணீர் பெற்றுக்கொடுப்பது வழக்கம். நோயாளருக்கு சுடுதண்ணீர் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். நோயாளர் அதிகரித்துவரும் இக்காலத்தில் அக்குறிப்பிட்ட நேரத்தில் எல்லோருக்கும் சுடு நீர் கொடுத்து முடிப்பதானல் அது முடியாத காரியம். ஆகை யால் பார்வையாளர் நேரத்தி லாவது சுடுதண்ணீரை கஷ்ட மில்லாது பெற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**ஜீவா**
கொக்குவில்.

# பிரதேசக் கல்வி அபிவிருத்தி சபை

## யாழ்ப்பாணத்தில் இயங்கத்தொடங்கியது

(உடுப்பிட்டி)

பிரதேசக்கல்வி அபிவிருத் திச்சபை இவ்வருடம் முதல் யாழ். பிரதேசத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இப் பிரதேசக் கல்வி அபி விருத்திச்சபைக்கான உறுப் பினர்களை கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜேரத்ன நியமித்துள்ளார்.

பிரஸ்தாப ஆலோசனைச் சபை பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

● ''நாட்டின் முன்னேற் றத்தை மனதில்கொண்டுள்ள ஒழுக்கசீலர்களான மாணவர் சந்ததியைக் கட்டி எழுப்பு வதன் மூலம் நாட்டிற்கும் இனத்திற்கும் உபயோகமான பண்புள்ள பிரஜைகளை உரு வாக்குதல்.

● ''சமுதாயத்தில் தற் போது நிலவும் தீய பழக்கங் களுக்கு மாணவர்கள் அடிமை யாகித் தவறிச்செல்வதைத் தடுப்பதற்காக அவர்களைத் தகுந்தவழியில் நெறிப்படுத்து தல்.

● ''ஜனநாயகம் தழைத் தோங்குவதற்கு அத்தியா வசியமானவையெனக் கருதப் படும் மனித உரிமைகளையும் கடமைகளையும் பல்வேறு சுதந்திரங்களையும் மாணவர் மத்தியில் பதியவைப்பதற்கு உகந்த சூழ்நிலையைப் பாட சாலைகளில் உருவாக்குதல்.

● ''ஒழுக்கக்கல்வியின் மூலம் சமயப்பற்றும் உய ரிய குணமும் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட ஆட்களினதும் நிலையங்களின தும் ஒத்துழைப்பைப் பெறு தல்''.

# "யாழ். மாவட்ட விவசாயிகளின் பிரச்னைகள் வித்தியாசமானவை"

## இதனைஅரசு உணரவேண்டும்என்கிறார் மானிப்பாய் எம்.பி.

(பண்டத்தரிப்பு)

''யாழ்.மாவட்டத்திலுள்ள எமது விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்னைகள் நாட் டின் இதர பகுதிகளிலுள்ள விவசாயிகளின் பிரச்னைகளி லும் பார்க்க வேறுபட்டதா கும். தங்கள் கடின உழைப் பாலும், அயராத முயற்சியா லும் விவசாயத்துறையில் முன்னேற்றம்காண விழையும் எமது விவசாயிகள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்னை களை உணர்ந்து அவற்றைத் தீர்த்துவைக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.''

இவ்வாறு உடுவில் கமநலச் சேவை நிலையத்தினர் இல ங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றுடன் இணைந்து நடாத்திய மானிப்பாய்த் தொகு விவசாயிகள் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்று கையில் மானிப்பாய்த் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார். இணுவில் சைவ மகாஜன வித் தியாசாலை மண்டபத்தில் யாழ்.மாவட்ட கமலசேவைத் திணைகள உதவி ஆணையா ளர் திரு. தர்மலிங்கம் தொட ர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''இலங்கையின் அபிவிருத் தித்திட்டங்களுக்கு வெளிநாடு கள் தாராளமாக நிதிஉதவி களை வழங்கி வருகின்றன. ஆனால் தமிழ்பிரதேசங்களின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு நிதிஉதவிகளிலிருந்து ஒரு சிறுதொகையைக்கூட செலவி டுவதற்கு அரசாங்கம் தயக் கம் காட்டுகின்றது. மகாவலி அபிவிருத்தித்திட்டம் போன்ற பல அபிவிருத்தித்திட்டங்க ளுக்கு கோடிக் கணக்கில் செல விடப்படும் பணத்தில் ஒருசத விகிதத்தை எங்கள் தமிழ்ப் பகுதி விவசாய அபிவிருத்திக்கு அரசு செலவிடுமானல் எமது விவசாயிகள் விவசாயத்துறை யில் சிறந்த சாதனைகளை நிலை நாட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.''

யாழ்.மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் உரையாற்றுகை யில் எமது நாட்டின் பொரு ளாதாரத்துறையில் விவசாயத் துறை முக்கியமானதொரு இடத்தை வகிக்கின்றது. விவ சாயத்துறையை அபிவிருத்தி செய்யுமுகமாக விவசாயிக ளுக்கு கடன்வசதி, பயிர்க் காப்புறுதி, உரமானியம் போன்ற பலவசதிகளை அர சாங்கம் வழங்கிவருகிறது, இந்தவசதிகளை இப்பகுதி விவ சாயிகள் நல்லமுறையில் பயன் படுத்தி தமது வாழ்வில் முன் னேற்றம் காணவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம், சண்டி லிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு, கோபாலரத்தி னம், பயிர்ப்பாதுகாப்பு பிரா ந்தியப் பணிப்பாளர் திரு. சு. சிவகுரு, இலங்கைவங்கி வட பிராந்திய முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம், உடுவில் விவசாயப் போதனாசி ரியர் திரு. தி. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் உட்பட பலர் உரை யாற்றினார்கள். மானிப்பாய்த் தொகுதி இளம் விவசாயிகள் கழகஙகளுக்கிடையில் நடாத்தப் பட்ட விவசாய அறிவுப் போட்டியில் கந்தரோடை இளம் விவசாயிகள் கழகம் அதிகபுள்ளிகளைப் பெற்று முத லிடத்தைப் பெற்றது. வெற் றியீற்றியவர்களுக்கான பரிசு களை மானிப்பாய் தொகுதி எம். பி.திரு. வி. தர்மலிங்கம் வழங்கினார். இறுதியாக கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு:

# திருமதி சிறிமா அழைக்கப்படுவார்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்கால அதிகார துஷ் பிரயோகங்கள் பற்றி விசா ரணை செய்யும் விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு, முன் னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை விசா ரணைக்கு அழைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் நீதியரசர் ஜெய பத்திரான, திரு. சி. மனோ கரா, முன்னாள் லஞ்சஆணை யாளர் இயன்விக்கிரமநாய க்கா, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் மைத் துனர் திரு. காமினி விக்கிரம நாயக்கா ஆகியோரும் இவ் வாணைக் குழுவினரால் விசாரிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

முன்னாள் நீதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டார நாயக்காவிற்கு எதிரான குற் றச்சாட்டுகள் சம்பந்தமான விசாரணை கடந்தவாரம் முடி வுற்றதைத் தொடர்ந்து ஆணைக்குழு இறுதி அறிக்கை யைத் தயாரிப்பதில் ஈடுபட் டுள்ளது.

இவ் ஆணைக்குழு பெப்ரவரி மாத நடுப்பகுதியில் மீண் டும் கூடுமென்று எதிர்பார்க் கப்படுகிறது.

# "குடும்பத்திட்டத்திற்கு ஆசிரியர் முன்மாதிரிகாட்ட வேண்டும்'

(அரியாலை)

''குடும்பத்தைத்திட்டமிடுவ தற்கு இன, மொழி, மத வேறுபாடுகள் கிடையாது. இதற்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை. தொழிலாளி யின் வாழ்க்கைக்குச் சம்பளம் முக்கியமானதல்ல. [illegible] [illegible] மிக வும் முக்கியமானதாகும். தொழிலாளர்களின் அடிப் படைப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டும். இலங் கையில் மொத்த சனத் தொகையில் 87 வீதமானவர் கள் கல்வியறிவுடையவர்களா வர். ஆனல் அண்டை நாடு களில் இத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது''

(7-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நடப்பும்

மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்லும் வழியில் இலங்கை ரசிகர்களையும் மகிழ்விப்பதற் காக கொழும்பில் ஒரு கச்சேரி நிகழ்த்துவார். இசைமுரசு நாகூர் எம். ஹனிபா என்று பத்திரிகைகளில் விளம்பரம் வந்திருந்தது. இசைமுரசுவின் இசை அமுதைப் பருகுவதற்கு கொழும்பிலுள்ளவர்கள் இந்த வாய்ப்பு மற்றும் நகரங்களில் வாழும் மக்களுக்குக் கிடைக் காமல் போய்விடுமே என்று கவலைப்பட்டோர் பலர். இசை முரசுவின் இன்னிசை விருந்து இப்போது பல நகரங்களிலும் நடைபெற்று வருகிறது. ரசி கப்பெருமக்களும் அமோக ஆதரவளித்து வருகிறார்கள். டிக்கட்டுகள் கொண்டு திரிந்து விற்கவேண்டிய நிலையில்லை. மக்கள் தேடிச்சென்று வாங்கு கின்றனர். யாழ்ப்பாணத்தி லும் கூட இசைமுரசுவின் இன் னிசை நிகழ்ச்சி நடைபெறக் கூடும்.

இசைத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி சர்ச் சைக்குரியவராகத் திகழும் இசை மேதை டாக்டர் பால முரளி கிருஷ்ண இலங்கைக்கு இன்னும் சில தினங்களில் வர விருக்கிறார். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இரு கச் சேரிகள் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கி றது. இலங்கை இளங் கலை ஞர் மன்றத்தின் கட்டிட நிதிக் காக இக்கச்சேரிகள் நடைபெற விருக்கின்றன, இளம் கலைஞர் மன்றம் பல இளம் கலை ஞர்களை உருவாக்கியும் நாட் டுக்கு அறிமுகப்படுத்தியும் நல்ல பணி செய்துவருகின்றது. ஒரு மண்டபம் அமைப்பதற்கு இந்த மன்றம் திட்டமிட்டு அதற்கு நிதி திரட்டுவதற் காகவே டாக்டர் பால முரளி கிருஷ்ணவை அழைத்திருக் கிறது.

இளம் கலைஞர் மன்றத்தின் செயலாளர் சிங்கி தவித்துவான் பொன் சுந்தரலிங்கமும், தவில் வித்துவான் திரு. என். ஆர். சின்னராசா வும் மற்றும் சில கலைஞர்களும் இக்கச்சேரி சிறப்பாகப் நடை பெறுவதற்காக இரவுபகலாக இடங்களிலும் திரிந்து டிக்கட் விற்பனை செய்துவருவதைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. நமது கலைஞர் களுக்குள் ஒற்றுமை நிலவ வேண்டும்; நமது ரசிகர்களின் மன நிலையிலும் மாற்றம் ஏற் படவேண்டும்.

ஃ ஃ ஃ

பண்டத்தரிப்பு சென் அன் ரனிஸ் லேன் ஆர். ஸ்ரனிஸ் சிங்கராஜா வாசகநேயர் அனு ப்பியுள்ள கடிதம்இது:

இலங்கை மில்க் கூட்டுத்தா பனத்தாரால் தயாரித்து விற் பனையாகும் ரின்பால் (கட்டிப் பால்) கடந்த பலகாலமாக வெள்ளை நிற ரின்னில் நீல நிற மையினால் எழுதப்பட்டு விநியோகிக்கப்பட்டுவருகிறது. அதேசமயம் தற்பொழுது அதே ரின்னில் பச்சை நிற மை எழுத்துக்களால் எழுதப் பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் பண்டத் தரிப்புப் பகுதியில் உள்ள கூட் டுறவுச்சங்க கிளைஒன்றிலிருந்து நீல நிற மையினால் எழுதப் பட்ட ஒரு ரின்பாலை வாங்கி யிருந்தேன்; அதனை ஆசை அருமையாக வீட்டில் தேனீ ருடன் கலந்து குடிப்பதற்காக உடைத்துப் பார்த்தபோது அந்த ரின்னிலுள்ள பாலின் மகிமைகெட்டு, யாரும் பாவிக்க முடியாத அளவு கெட்டுப் போய் துர் மணத்துடன் அடங்கி இருந்தது. என்ன புதுமையிலும் புதுமை இது. கூட்டுறவுக் கடைகளிலேயே இப்பேர்ப்பட்ட தரங்கெட்ட பழுதடைந்த பொருட்கள் விற்பனையாவதால் பாவனையா ளர் நிலைமை பரிதாபம். இதற் குப் பொறுப்பான அதிகாரி கள் இனிமேலாவது கவனிப் பார்கள், என எதிர்பார்க் கின்றேன். மேலும் பாவனை

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்கூலிகள் வேளாண்மை

## கைத்தொழில்துறையில் அதிகரிப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

1978-ல் அரச ஊழியர்களின் பணக்கூலிகள் 10-16 சதவீதத்தால் அதிகரித்தது ஆயினும் 1978-ல் ஏற்பட்ட 12 சதவீதமான அதிகரிப்பை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுல் சுருக்குமிடத்து சிற்றூழியர் தவிர்ந்த ஏனைய எல்லா ஊழியர்களினதும் உண்மைக் கூலிகள் குறைந்தே காணப்பட்டது. மறுபுறத்தில் தனியார் துறையில் உண்மைக் கூலி அதிகரித்து காணப்பட்டது. பணக்கூலி வேளாண்மைத் துறையில் 45 சதவீதத்தாலும் கைத்தொழில் வணிகம் ஆகிாதுறைகளில் 24 சதவீதத்தாலும் அதிகரித்தது.

(பக்கம் 130-134)

### பண நிரம்பல்

1978-ல் பண நிரம்பல் ரூ.5,700 இலட்சத்தால் அல்லது 11 சதவீதத்தால் அதிகரித்தது. பணநிரம்பல் 1976 இன் 35 சதவீதத்திலிருந்தும் 1977 இன் 29 சதவீதத்திலிருந்தும் இவ்வீதத்திற்குத் குறைந்துள்ளமை பெரிதும் வரவேற்கக்கூடியதாகும். அரசினது வரவு செலவுத்திட்டத்தின் திறமையான முகாமை உயர்ந்த வட்டிவீதக் கொள்கை ஆகியவற்ருல் சேமிப்புக்கள் அதிகரித்தமையே இத்தகைய அடைவுக்கு பொறுப்பான காரணிகளாகும். பணநிரம்பலில் ஏற்பட்ட இவ்வி... வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் (பெரிதும் மூலதன உள்வருகையின் காரணமாக அதிகரித்தது) தனியார்துறையின் பெருமளவிலான கடன்பாடுகளுமே காரணமாகும்:

(பக்கம் 135-142)

வட்டிவீதங்கள் நிலவியபோதிலும் 1978-ல் தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடன் அதிகரிப்பொன்றைப் (ரூ. 30,260 இலட்சம்) பதிவு செய்தது. இப்பண்புகள் பொருளாதாரத்தின் மேலதிக திரவத்தன்மைகளை ஈராக்கும் கொள்கைகளுக்குத் துணை நின்றதோடு மட்டுமன்றி மூலவளங்களை செயலாற்றல் மிக்க வகையில் ஒதுக்கீடு செய்வதற்கும் துணைநின்றன.

(பக்கம் 149-152)

### நாணயக்கொள்கை

1977-ம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1978 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்த உறுதியான நாணயக் கொள்கை வழிமுறைகள் இருந்திருக்காவிட்டால் சாத்திய பணவீக்க விளைவுகளுடன் கூடிய நாணய விரிவாக்கம் இன்னும் பெருமளவில் அதிகரித்திருக்கும். அதிகரித்த வட்டியில் கடன்பாடுகள் பற்றிய சிற்சில முறையீடுகள் பெருமளவில் குறைந்த வட்டி வீதத்தில் கடன்பெற்றுப் பழக்கப்பட்டவர்களிடமிருந்தே கிடைக்கப்பெற்றதெனலாம். 1976-ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிலவிவந்த இருபுள்ளி பணவீக்க நிலைமைகளில் சேமிப்புக்கக்ான ஊக்குவிப்புக்களையும் மூலவளத்திரட்டல்களையும் பாதிக்காதவகையில் எவ்வாறு மலிவான நாணயக் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க முடியாதுள்ளது. தற்போது நடைமுறையிலிருக்கும் நாணயக்கொள்கை, பொருள்ாதாரம் தன்னைப் பணவீக்கத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு நாணயத்தின் உறுதிப்பாட்டினை நிலைநிறுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் காட்டுகிறது.

(பக்கம் 175-176)

### அரசநிதி

1978-ம் ஆண்டுக்கான நிதித்தொழிற்பாடுகள் 1977 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் செல்வாக்கிற்குப் பெருமளவில் உட்பட்டிருந்தன. இச்சீர்திருத்தங்கள் நீண்டகாலத்தில் பொருளாதாரத்தைச் செயல்திறன்மிக்கதாகச் செய்வதையும் பொருளாதாரத்தின் ஒழுங்கான தொழிற்பாட்டிற்கு தடையாக நின்ற காரணிகளை அகற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. குறுங்காலத்தில் இச்சீர்திருத்தங்கள் நடைமுறைக்கணக்கு மிகைபினை உருவாக்குவதனையும், மூலவளங்களை நுகர்விலிருந்து முதலீடு நோக்கி மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தன. அத்துடன் மீண்டெழும் செலவுகளுக்கும் மூலதனஆக்கத்திற்கும் மூலவளங்களை மறைமுகவரிகள் வாயிலாக பெறுவதற்கு பெமளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலும் செலாவணி சீர்திருத்தங்களின் பெரும்விளைவாக வரவு செலவு திட்டத்தின் அளவு இருமடங்காகியது. இது சீர்திருத்தங்களின் விளைவாக வருமான மட்டங்களின் மாற்றங்களினுலும் விலைகள் செலவுகள் ஆகிய வற்றின் அதிகரிப்பினுலும் ஏற்பட்டது. இவைகள் வருமானம் செலவு ஆகியவற்றில் கணிசமான அதிகரிப்புக்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தன.

(பக்கம் 177)

(திங்கள்தொடரும்)

**1978ம் வருடத்திய மத்தியவங்கியின் பொருளாதார மீளாய்வு**

### வட்டிவீதங்கள்

இரண்டுபுள்ளிகள் அளவில் அமைந்திருந்த பணவீக்கத்தின் உள்ளமைப்பில் குறுங்கால வட்டிவீதங்கள் உயர்ந்த மட்டத்தில் நகரக் கூடியதாக 1977 இன் வட்டிவீத சீர்திருத்தங்கள் அமைந்தன. வர்த்தக வங்கிகள் 1978-ல் புதிய வட்டிவீத காலப்பகுதியில் மேலதிகமாக ரூ. 16,050 இலட்சம் கொண்ட மூலவளங்களை திரட்டியபொழுது தேசியசேமிப்பு வங்கி மேலும் ரூ. 4,180 இலட்சத்தைச் சேர்த்தது. உயர்ந்த கடன்



கொழும்பிலும் வெளியூர்களிலும் மேடையேறி வெற்றி கண்ட "கிறேஸி கோமாளிகள்" நகைச்சுவை நாடகம் இன்றும் நாளையும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்மேடையேறுகிறது. கிறேஸி கோமாளிகள் நாடகத்தில் பிரபல வானெலி மேடை திரைப்பட நடிகர்களான மரிக்கார் ராம்தாஸ், அப்புக்குட்டி ராஜகோபால், உபாலி செல்வசேகரன், எஸ். குமாரவேல், எம். எஸ். ஈஸ்வரன், எழில் வேந்தன், ஸ்ரீதேவி, ஜெயதேவி, ஜெயந்தி ஆகியோர் நடித்திருக்கிறார்கள். இந்நாடகம் இன்று கோல்டன் தேயிலை தயாரிப்பாளர்கள் ஆதரவிலும், நாளை சேம்பியன் பட்டாசுகள் தயாரிப்பாளர்கள் ஆதரவிலும் மேடையேறுகிறது.

### வேலைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

சாத்தான்குடியில் 200 நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் எட்டு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனா. சம்பளம் அதிகரிக்கப்படவேண்டுமென்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாகும். (செ)

## "மரபுவழிக் கவிதையை பாதுகாக்கவேண்டும்"

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச்சிதம்பர புராணம் பாடிய நவாலியூர் புலவர்மணி கவிச்சிந்தாமணி சோ. இளமுருகனரின் நினைவு தினத்தையொட்டி காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய 'இன்தமிழ் காத்த இளமுருகனர்' என்ற தலைப்பிலான கவிதைப் போட்டியில் பின்வருவோர் பரிசில்களைப் பெற்றனர்,

முதற்பரிசு: 'மதியழகன்', யாழ்ப்பாணம், 2-ம் பரிசு: திரு. க, செல்லத்துரை, அரியான் பொய்கை, முள்ளியவளை. மூன்ரும் பரிசு: திரு. வ. குகசர்மா, தெல்லிப்பழை.

### பதக்கம் பெற விரும்பாத கவிஞர்

இப்போட்டியில் முதற் பரிசு பெற்றவரான கவிஞர் மதியழகன் தமது புலமையை வெளிப்படுத்துவதற்காகவே போட்டியில் கலந்துகொண்டதாக் கூறித் தமக்குரிய தங்கப் பதக்கத்தை2-ம் பரிசாகபெற்றவருக்கு வழங்குமாறு கோரியதைத் தொடர்ந்து அவ்வாறே வழங்கப்பட்டது. 3-ம் பரிசு பெற்றவர் வெள்ளிப்பதக்கம் பெற்றார்.



கவிச்சிந்தாமணி
இளமுருகனர்

மணிவாசகர் சபையினரின் அழைப்பின் மீது ஈழத்துச்சிதம்பரத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு இங்கு வருகை தந்திருந்த தருமையாதீனம் பேராசிரியர் இரா. செல்வக் கணபதி இவ்வைபவத்தில் சிறப்பாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர். இளமுருகனரின் புதல்வர் பல்வைத்தியநிபுணர் பா. சோ. பாரதி சான்றிதழ்களை வழங்கினர்.

பேராசிரியர் செல்வக்கணபதி இவ்வைபவத்தில் பேசுகையில், ஈழத்துச் சிதம்பர புராணத்தை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டியதுடன் இம்மாபெரும் புராணத்தை புலவர் பெருமகனை நினைவு கூர்ந்து கவிதைப் போட்டியை ஏற்படுத்தியதற்கும் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார். ஆண்டு தோறும் இப்பெரும் புலவரின் நினைவாக மணிவாசகர் சபை இவ்வித ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பண்டிதர் ச. பயில்வாகனர் புலவர்மணியின் கல்வித் திறன் பற்றிப் பேசுகையில், சிறு வகுப்பிலிருந்தே தமிழ் இலக்கணத்தை செவ்வனே கற்பிப்பதற்கு அவர் சிறந்த திட்டமொன்றை வகுத்தாரென்றும் அவர் தமது இறுதிக்காலத்தில் இதுபற்றி பேசி வந்தாரென்றும், எனவே இலக்கண மரபுவழி அழியாது மரபு வழிக் கவிதையை பாதுகாக்க வேண்டுமென்றும் இதுவே நாம் புலவர்மணிக்குச் செய்யும் கைம்மாறென்றும் கூறினர்.

## "ஈழநாடு" தேர்தல் போட்டி

இந்தியப் பாராளுமன்றத்துக்கான இடைக்காலத் தேர்தலையொட்டி "ஈழநாடு" பத்திரிகை நடத்திய தேர்தல் போட்டி, கடந்த வியாழக்கிழமை 3ம் திகதியுடன் முடிவடைந்தது. நாம் ஏற்கனவே அறிவித்ததற்கிணங்க 3ம் திகதி மாலை ஐந்து மணிக்கு தேர்தல் கூப்பன்கள் உள்ள பெட்டி, இப் போட்டி சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகள் முன்பாக அரக்கு 'சீல்' வைக்கப்பட்டு, பத்திரமான இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இந்திய இடைக்காலத் தேர்தல் சம்பந்தமான முழு முடிவுகளும் வெளியாகி, பிரதமரும் தெரிவு செய்யப்பட்டு, புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர், தேர்தல் கூப்பன்கள் உள்ள பெட்டி, நடுவர் குழு முன்பாகத் திறக்கப்படும். இதனைத்தொடர்ந்து கூப்பன்கள் ஒவ்வொன்றும், மிகக் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டு, சரியான விடைகளை எழுதியவர்களின் கூப்பன்கள் தனியாகப் பிரித்தெடுக்கப்படும். ஒன்றுக்கு அதிகமானவர்கள் முழுதும் சரியான விடைகளை எழுதியிருந்தால் இவர்கள் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு, முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் பரிசுகளுடன் மிகுதி இருபத்தேழு பரிசுகளும் வழங்கப்படும்.

குறிப்பு: போட்டி முடிவு திகதியான 3-ம் திகதி மாலை 5 மணிக்குப் பின்னர் எமக்கு வந்து குவிந்த கூப்பன்கள் முழுவதுமே நிராகரிக்கப்பட்டுவிட்டன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேம்.

[போட்டி பற்றிய மேலதிக விபரங்களுக்கு, அடுத்தடுத்த "ஈழநாடு" இதழ்களைப் பாருங்கள்]

## சைவசமயபாட பரீட்சை: பரிசு பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையால் நடாத்தப்பட்ட அகில காரைநகர் சைவ சமய பாடப் பரீட்சையில் பரிசில்கள் பெறுவோர் விபரம் வருமாறு:-

2-ம் வகுப்பு: ஐ. கௌரி, வி. ஸ்கந்த பிரசாத், து. தயானந்தன்.

3-ம் வகுப்பு: க. மங்களேஸ்வரி, அ. தேவகுமாரி, வ. அகிலா.

4-ம் வகுப்பு: பொ. சிவானந்தன், தி. சண்முகநாதன் க. சத்தியதாசன்.

5-ம் வகுப்பு: கு. சுதாகர், ந. இரத்தினாம்பிகை, க. பஞ்சவி

6-ம் வகுப்பு: ச. சபாநாயகி, வை. ரவீந்திரன், ந. ஜெயக்குமார்.

7-ம் வகுப்பு: பொ. நாகபூஷணி, செ, நளாயினி, ம. இராசலிங்கம்.

8-ம் வகுப்பு: இ. லலிதாம்பிகை, ஆ. கோடீஸ்வரன், இ. ரேவதி தேவி.

9-ம் வகுப்பு: பொ. இரதிதேவி, து. சிவபாதம், க. ரயாகராணி.

10-ம் வகுப்பு: தே. செல்வராணி, ச. சிவசிரோமணி, . துளபமணி.

மேற்படி பரிசில்கள் மணிவாசகர் விழா நிகழ்வில் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள்பாவனைக்கு யாழ். நகர மண்டபம்

## ஜன. 10-ல் மேயர் திறந்துவைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தை இம்மாதம் 10-ந் திகதி, யாழ் நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் மீண்டும் பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவைப்பார்.

கடந்த 6 ஆண்டுகளாக தியேட்டராக இருந்து மாறிய இம் மண்டபத்தில் பொது நிகழ்ச்சியாக வெளிநாட்டிலிருந்து திரும்பும் நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் அன்று காலை 11 மணிக்கு உரை நிகழ்த்துவார்.

சபை உறுப்பினர்களுக்கும் மாநகரசபை ஊழியர்களுக்கும் இக்கூட்டம் நடைபெறும்.

கொழும்பிலிருந்து 9-ந் திகதி நண்பகல் ரயில் மூலம் யாழ் ரயில்நிலையத்தை வந்தடையும் முதல்வருக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்படும்.

பிற்பகல் கூட்டணி உறுப்பினர் திரு. செ. குமாரவேலு தலைமையில் 22-ம், 23-ம் வட்டார மக்கள் சார்பில் வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் பிள்ளையார் ஆலயத்தில் முதல்வருக்கு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

இதைத் தொடர்ந்து வெளிநாடு சென்று திரும்பிய முதல்வருக்கு வட்டார ரீதியாக வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (கு-இ)

## புதிய லீவு விடுமுறை இவர்களுக்கு விதி விலக்கு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான புதிய லீவு விடுமுறைகளிலிருந்து தாதிமார்களுக்கும் ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்களுக்கும் விதிவிலக்களிப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது'

இவர்கள் கிழமையில் ஆறு நாட்களுக்குவேலை செய்வதினுலேயேஇவ் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. (வெ)

## புனித அந்தோனியார் ஆலய விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம்அந்தோனியார்ஆலயத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலய முன்றலில் நடைபெறும்.

திரு. ஜோ. சாள்ஸ் ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில், யாழ். மாவட்ட இராணுவ பாதுகாப்பு அதிகாரி பிரிகேடியர் வீரதுங்க பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். வடபகுதிப் பொலிஸ் அதிபர் கிங்ஸ்லி விக்கிரமசூரியா கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பங்குத் தந்தையும், போஷகருமான வண. சூசைப்பிள்ளை அடிகள் கொடியேற்றி விளையாடுப்போட்டியை ஆரம்பித்துவைப்பார்.

வண. பிதா ஆர். யோசேவ் அடிகளார், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. அலெக்ஸ்சாண்டர், சட்டத்தரணி விநோதன் மற்றும் பலரும் உரையாற்றுவார்கள். (கொ)

### சூறாவளியால் பாதிப்படைந்த

## மட்டுநகர் கல்லூரிகளுக்கு

# புதிய கட்டிடங்கள்

[மட்டக்களப்பு]

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகள் புனரமைப்பதற்குப் பதிலாக புதிய கட்டிடங்களாக அமைக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளில் ஏற்கனவே பல பாடசாலைக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்தியகல்லூரி, புத்தூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை உட்பட பல பாடசாலைகள் இருமாடிக் கட்டிடங்களாக அமையவிருக்கின்றன. தற்காலிகமாய் அமைத்த பாடசாலைகள் அநேகமானவை தென்னங்குற்றி நடப்பட்டமையால் விழும் நிலையிலும் சில பாடசாலைகளின் ஓலைகள் அழிந்தநிலையிலும் இருப்பதல் மீண்டும் அவகளை புனரமைக்கவும் திருத்தம் செய்யவும், தற்காலிக கொட்டில்கள் மேலும் பல அமைக்கவும்வேண்டிய நிதியை கல்விஇலாகா வழங்க வேண்டிய ஏற்பாடுகளை செய்துவருகின்றது. (கு)

## தமிழர்கூட்டணி செயற்குழு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரவலாகப் பேசப்பட்டாலும் கூட்டணி இதுபற்றி எவ்வித கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை, உத்தேச மாவட்ட அபிவிருத்தி சபை பற்றிய வெள்ளை அறிக்கை வெளியான பின்னரே கூட்டணி தனது நிலையை வெளியிடுமென நம்பப்படுகிறது. நிலைமை இவ்விதமிருப்பதால் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பற்றி இன்று நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில் ஆராய்து கருத்து வெளியிடப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

உத்தேச மாவட்டசபைகள் பற்றி பிரதமர் திரு. பிரேமதாசா உள்ளூராட்சி அமைச்சின் மான்யம் மீதான் குழுநிலை விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் அதன் அமைச்சு பற்றிய அரசாங்கத்தின் தீர்மானங்களை தெரிவித்தபோதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதுபற்றி எவ்வித கருத்தையும் வெளிப்படுத்தவில்லை. அந்த விவாதத்தில், கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமோ, செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமோ உரை நிகழ்த்தவுமில்லை. ஆனால் அதே வேளை, "தனிநாடு கோரிக்கையைக் கைவிடும்படி கூறும் அரசு, தகுந்த ஒரு மாற்றுத் திட்டத்தைத் தந்தால் அது நியாயமானதாக இருந்தால் அதை மக்கள் முன் நாம் சமர்ப்பிப்போம்'' என்று திரு. அமிர்தலிங்கம் இரண்டு தடவைகள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

தமிழ் இளைஞர் பேரவை; வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது கூட்டணி உறுப்பினர்கள் அளவுக்கு மிஞ்சிய விதத்தில் அரசாங்கத்தைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்களென்றும், இதுபற்றி தலைமைப்பீடம் நடவடிக்கைஎடுக்க வேண்டுமென்றும், தவறினால் நேரடி நடவடிக்கைகளில் நாமே இறங்க நேரிடுமென்றும் மட்டக்களப்பில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

கூட்டணிக்கும் - இளைஞர் பேரவைக்கும் இடையே சில காலமாக இருந்துவந்த கருத்து வேறுபாடுகளைக் களைந்து, ஒன்றிணைப்பதில் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் வெற்றி கண்டிருந்தார். மீண்டும் இருபகுதியினருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தும் வகையில் இன்றைய கூட்டம் நடைபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. [ம]



புலவர்மணி சோ. இளமுருகனாரின் நினைவு தினத்தையொட்டி காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற திரு. வ. குகசர்மாவுக்கு பல்வைத்திய கலாநிதி பா. சோ. பாரதி பரிசு வழங்குவதைக் காணலாம்.

## கைலாசபதி கலைப்பீடாதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரும், தமிழ்ப் பேராசிரியருமான கலாநிதி க. கைலாசபதி இப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதியாக அதன் கல்விசார் உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (வெ)

......

## மீனவர் தங்குமிடம்

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம் மேற்கிலுள்ள புளியந்துறையில் 20 ஆயிரம் ரூபா செலவில் மீனவர்களுக்கான தங்குமடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

......

## மின் வினியோக அங்குரார்ப்பணம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிராமசபைப் பிரதேசத்திலுள்ள நவாலி வடக்கில் 90 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்ட மின் விநியோகத் திட்டத்தை மானிப்பாய்த் தொகுதி எம்.பி, திரு.வி, தர்மலிங்கம் அன்மையில்அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மானிப்பாய் கிராமசபை விசேட ஆணையாளரும், வலி தெற்குப் பிரிவு உதவிஅரசாங்க அதிபருமான திரு.ஏ.சி. செபநாயகமும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

......

## திட்ட ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தின் திட்ட ஆலோசனைக் கூட்டமொன்று இன்று மாலை சித்தன் கேணி மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

தென்னை, மரமுந்திரிகை ஆகிய மரங்களுடன் உணவுப் பயிர்களை உற்பத்தி செய்தல். வீட்டுத்தோட்டம், ஆடு, மாடு, கோழி நல்ல தண்ணீர் மீன்வளர்ப்பு ஆகியவற்றுக்கான அரசின்உதவியுடன் மேற்கொள்ளப்படும்திட்டங்கள்இக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்களும், பொது நிறுவனங்களும் கலந்துகொள்வர்.

## பரிதாப மரணம்

(மன்னார்)

கடுங்காற்றையும் பொருட்படுத்தாது தெப்பத்தில் மீன்பிடிக்கச் சென்றவர் கடல் அலைகளால் தூக்கி வீசப்பட்டு மூச்சுத்திணறி மரணமானார்.

தலைமன்னார்பியரைச்சேர்ந்த முத்துசாமி (25 வயது) என்பவர் கடுமையான காற்று வீசியபோதும் அதனைப் பொருட்படுத்தாது தெப்பத்தில் ஏறி கடலில் மீன்பிடிக்கச் சென்றார் என்றும், மாலை நேரம் மீன்பிடிக்கச் சென்றவர் மறுநாட் காலை இறந்த நிலையில் தலைமன்னார் பியர் கடற்கரையில் காணப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடுமையான காற்று வீசியதால் கடல்அலைகளால் தூக்கி வீசப்பட்டு மூச்சுத்திணறி இறந்திருக்கலாம் என்றும் இறந்தவருக்கு நீந்தத் தெரியாது என்றும் இறந்தவரின் மனைவியும் தந்தையும் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரியும் சட்டத்தரணியுமான திரு. கயஸ் பெல்டானோ, மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணம்என்று தீர்ப்பளித்தார்.

## தாலிக்கொடி மாயம்

(பண்டத்தரிப்பு)

இரவு படுக்கைக்கு போகும்போது தமது ஒன்பது தங்கப் பவுண் நிறையுள்ள தாலிக்கொடியைக் கழற்றி தலையணைக்குக் கீழ் பாதுகாப்பாக வைத்துவிட்டு நித்திரைசெய்த பெண் ஒருவர் காலையில் மீண்டும் தாலிக்கொடியை எடுக்கச் சென்றபோது அத் தாலிக்கொடி மாயமாய் மறைந்துவிட்டதாம்.

வழக்கம்பரையில் நடைபெற்ற இந்த அதிர்ச்சிச் சம்பவம்பற்றி பிரஸ்தாப பெண்ணின் கணவர் சுந்தரராசா சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நியமனம்

(மன்னார்)

பேசாலையைச் சேர்ந்த சட்டத்தரணியும், மரணவிசாரணை அதிகாரியுமான திரு. கயஸ் பெல்டானோ, மன்னார் மாவட்ட சமாதான நீதவானாகவும் உத்தியோக பற்றற்ற நீதவானாகவும் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்: திரு. கயஸ் பெல்டானோ இலங்கை மீன்பிடி விற்பனவுக் கூட்டிறவுச் சங்கத்தின் இயக்குநர் சபை அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இம்மாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த. (உயர்தர) பரீட்சைமுடிவுகளை பெப்ரவரி மாதமளவில் வெளியிட பரீட்சைத்திணைக்களம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வெ)

## இடமாற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்கள்.

இனைத் தொடர்ந்து இவ்விடயமாக பேட்டிகான சந்தர்ப்பம் அளிகுமாறு 5 தொழிற்சங்கங்கள் ஜனாதிபதி, பிரதமர், பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம ஆகியோருக்கு தந்தி அனுப்பியுள்ளனர்.


### 1-1-1980 முதல் 'ஈழநாடு' சந்தா

(தபால்மூலம் விநியோகம்)
தினசரி-வாரமலர்(உட்பட)

3 மாதம் ரூபா 60-00
6 மாதம் ரூபா 120-00
1 வருடம் ரூபா 240-00

வாரமலர் (மட்டும்)

3 மாதம் ரூபா 9-75
6 மாதம் ரூபா 19-50
1 வருடம் ரூபா 39-00

(ஆள்மூலம் விநியோகம்)
(யாழ். மாநகரசபை எல்லைக்குள்)
தினசரி-வாரமலர்(உட்பட)

3 மாதம் ரூபா 47-00
6 மாதம் ரூபா 93-00
1 வருடம் ரூபா 186-00

வாரமலர் (மட்டும்)

3 மாதம் ரூபா 7-75
6 மாதம் ரூபா 15-50
1 வருடம் ரூபா 31-00


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பணயக்கைதிகளை விடுவிக்கும் முயற்சி தோல்வி!

## வால்ட்ஹெய்ம் இன்று திரும்புவார்

தெஹ்ரான், ஜன. 4

பணயக்கைதிகளை விடுவிக்க ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் எடுத்த முயற்சி எதுவும் பலனளிக்காத அதே வேளையில் அவர் இன்று அமெரிக்கா திரும்புவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஈரானிய மதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னியைச் சந்திக்க டாக்டர் வால்ட்ஹெய்ம் எடுக்கும் முயற்சி பலனளிக்காவிட்டால் இன்று அவர் அமெரிக்க திரும்புவார்.

அயத்தொல்லா கொமெய்னியை அவர் சந்திக்க மாட்டார் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ள போதிலும் அவரைச் சந்திப்பதற்கான காரணங்களை விளக்கி ஆலோசனை சமப்பிக்கப்பட்டிருப்பதாகவும் நிச்சயம் அவர் தம்மைச் சந்திப்பார் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாகவும் டாக்டர் வால்ட் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

தெஹ்ரானில் வைத்து டாக்டர் வால்ட் ஹெய்மைக் கொலைசெய்ய சிலர் முயன்றது பற்றி நிருபர் ஒருவர் கேட்ட போது அதுபற்றி தமக்கு எதுவுமே தெரியாது என்றும் ஆனல் தனக்கான பாதுகாப்பு இப்போது பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும்அவர் கூறினர்.

இதேவேளையில் ஈரானில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க அதிகாரிகள் எதிர் வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் விடுவிக்கப்படாவிட்டால் ஈரானுக்கு எதிராக சர்வதேச பொருளாதாரத் தடைபற்றி ஆலோசிக்கப்படும் என்று ஐ. நா. பாதுகாப்புச்சபை அறிவித்துள்ளது. (கு)

## ஆப்கானைக் கைப்பற்ற அமெரிக்கா முயற்சி

### சோவியத் குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஜன. 4.

ஆப்கானிஸ்தானை தனதுகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா முயல்வதாக சோவியத்யூனியன் குற்றஞ் சாட்டியுள்ளது.

சோவியத் யூனியனின் அரசாங்கப்பத்திரிகையான 'ஸ்வித்தியா' வில் இதுபற்றி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சோவியத் யூனியன் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரானில் மன்னர் ஷா ஆட்சியில் இருந்தபோது தமக்கிருந்த செல்வாக்கை அமெரிக்கா இழந்து போனதற்கு பதிலாகவே ஆப்கானிஸ்தானை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயன்று வருகிறது என்று அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## எண்ணை விலை அதிகரிப்பு

மெக்ஸிக்கோ, ஜன. 4

மெக்ஸிக்கோ ஏற்றுமதி செய்யும் எண்ணை விலையை ஒருபீப்பா 32 டாலராக அதிகரித்துள்ளது.

அதன் எண்ணையை இறக்குசெய்யும் நாடுகளுடன் ஆலோசித்தே 24 டாலராக விற்பனை செய்த எண்ணையை 32 டாலராக அதிகரித்துள்ளது. (கு)

## தூதுவர் அழைக்கப்பட்டார்

வாஷிங்டன், ஜன. 4

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியனின் துருப்புகளின் தலையீடுபற்றி ஆராய்வதற்காக மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் வாஷிங்டனுக்குத் திருப்பி அழைக்கப் பட்டுள்ளார்.

சோவியத்தின் தலையீடுபற்றி தமது தூதுவருடன் ஆராய்ந்த பின் நேசநாடுகளுடன் பேச்சுவார்த்தைநடாத்திய பின்னரே அமெரிக்கா சோவியத்துக்கெதிரான நடவடிக்கை பற்றி தீர்மானிக்கும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர்தெரிவித்தார். [கு]

## விசாரணை நடக்கும்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் தரம் இரண்டிற்கான மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் இடம் பெற்ற முறையீனங்கள் பற்றி இரகசிய குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (வெ)

## ஒளி விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை.எம்.சி ஏ.ஆதரவில் நடாத்தப்பட்ட ,,ஒளி விழா'' பண்டத்தரிப்பு திருச்சபை தேவாலயத்தின் திறந்த வெளி அரங்கில் இடம் பெற்றது. இன்னிசை,நாடகங்கள் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இவ் விழாவில் இடம் பெற்றன' (அ)

### ஆப்கானிஸ்தான் புரட்சி

# ரஷ்யாவின் தலையீட்டுக்கு இஸ்லாமிய நாடுகள் கண்டனம்

## எதிர்நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச்சபையிடம் கோரிக்கை

**நியூயோர்க், ஜன. 4**

**ஆப்கானிஸ்தானில் சோவியத்யூனியனின் தலையீட்டை வன்மையாகக்கண்டித்துள்ள இஸ்லாமிய நாடுகள், சோவியத் யூனியனுக்கு எதிராக நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று ஐ. நா.பாதுகாப்புச்சபையை கோரியுள்ளன.**

இஸ்லாமிய நாடுகளின் இக் கோரிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விரைவில்ஆராயக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் சோவியத் யூனியனின் இத் தலையீட்டை வன்மையாகக் கண்டித்துள்ள அமெரிக்கா ஐ. நா. பாதுகாப்புச்சபைக்கு முறையிட்டுள்ளதுடன் சோவியத் யூனியனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை பகிஸ்கரிக்க வேண்டும் என்றும் வங்கிக் கடன்களை தடைசெய்யவேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளது.

சோவியத் யூனியனின் படையெடுப்பை 'கம்யூனிஷப் படையெடுப்பு' என்றுகண்டித்துள்ள எகிப்து, இப்படையெடுப்புக்கு எதிராக போராடத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளது. [கு]

### பொல்பொட் ஆட்சி:

## பிரிட்டனின் நடவடிக்கைக்கு பல நாடுகள் வரவேற்பு

ஜகார்த்தா,ஜன,4

கோலாலம்பூரில் நடைபெற்ற ஆஸியன் (இந்தோனேஷியா,, மலேஷியா, சிங்கப்பூர் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து) அயல்நாட்டு அமைச்சர்கள் மகாநாட்டில் பொல்பொட் ஆட்சிக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்துக்கு பிரிட்டன் வாபஸ்செய்து கொண்ட விஷயம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

பிரிட்டிஷ் நடவடிக்கை பற்றி கருத்து பிரசுரித்துள்ள 'பங்கோக்போஸ்ட்'' ''பகுத்தறிவு ரீதியானது எதார்த்தமானது'' என்று வர்ணித்துள்ளது. மற்ற நாடுகளும் பிரிட்டனின் முன்மாதிரியை விரைவில் பின்பற்றலாம் என்றும் அது எழுதியுள்ளது.

அதே நேரத்தில் இன்றைய கம்பூச்சியா அரசை இந்திய அரசு முதலாக பல அரசுகள் அங்கீகரிக்காமல் இருப்பதை சீன அதற்குச் சாதகமாக பாவிக்கலாம் என்று பம்பாய் பத்திரிகையானபிலிட்ஸ் கவலை தெரிவித்துள்ளது: ''இந்தியாவுக்கும் வியட்னுமுக்கும் பொதுவான பந்தோபஸ்து அச்சுறுத்தல் நிலவுகிறது. எமது வடகிழக்கு எல்லையில் சீன கொரில்லா படைகளிடமிருந்து அச்சுறுத்தல் வருகிறது. ஹெங்க் சமரின் நிர்வாகம் அங்கீகரிக்கப் பட்டால் இன்றைய நிலைமையில் ஆக்கிரமிப்பை பெரிதும் தடை செய்ய ஏதுவாய் இருக்கும் என்று பிலிட்ஸ் எழுதியுள்ளது.

30க்கும் அதிகமான அரசுகள் இன்றைய கம்பூஷியா அரசை அங்கீகரித்து விட்டன.

''கம்பூச்சியா பிரச்னையை தீர்ப்பதற்கு சரியான வழி ஹெங் சமரின் ஆட்சி இல்லையென்று கற்பனை செய்யாமல் இருப்பதேயாகும்'' என்று ஜகார்த்தா பத்திரிகையான மெர்தேகா எழுதுகிறது.

### ★ இந்திய இடைத்தேர்தல்

# இரண்டாம்கட்ட வாக்களிப்பு நாளை நடைபெறும்

## மாலையிலிருந்து முடிவு வெளியாகும்

(புதுடில்லி)

சுதந்திரப் பாரதத்தின் ஏழாவது பாராளுமன்ற (லோக சபை) இடைத்தேர்தலின் 2-வதுகட்ட வாக்களிப்புநாளை நடைபெறும்.

542 மொத்த ஆசனங்களைக் கொண்ட இந்திய பாராளுமன்றத்தில் 525 தொகுதிகளுக்கு மட்டுமே வாக்களிப்பு நடைபெறவிருந்தது. இவற்றில் 244 தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் முதல்கட்ட வாக்களிப்பு நடைபெற்றது. மிகுதி 281 தொகுதிகளுக்குமான வாக்களிப்பு நாளை நடைபெறவுள்ளது.

நாளைய வாக்களிப்பு பல முக்கிய தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. முன்னுள்பிரதமர் திருமதி இந்திரா காந்தி போட்டியிடும் ராய்பரேலித் தொகுதியில் வாக்களிப்பு முடிந்துவிட்டதனுலும் அவர் வாக்களிக்க முடியவில்லை. அவர் போட்டியிடும் மற்றைய தொகுதியான ஆந்ரப்பிரதேசத்திலுள்ள'மெதத்' தொகுதியில் நாளை வாக்களிப்பு நடைபெறும்.

**தமிழ்நாட்டில்**

தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 39 தொகுதிகளில் 19 தொகுதிகளுக்கான வாக்களிப்பு நேற்று முன்தினம் முடிவடைந்துவிட்டது. மிகுதி 20 தொகுதிகளுக்குமான வாக்களிப்பு நாளை நடைபெறும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்களிப்பின் முடிவுகள் நாளைமாலை முதல் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் 7-வது பிரதமர் யார் என்பது அநேகமாக செவ்வாய்க்கிழமை தெரிந்துவிடும். (கு)

# அமினின் படைகளை முறியடிக்க சோவியத் முயல்கிறது!

## அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜன. 4

ஆப்கானிஸ்தானுக்குமேலும் 12 ஆயிரம் துருப்புக்களை அனுப்ப சோவியத் யூனியன் திட்டமிட்டுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சோவியத் யூனியனின் துருப்புக்களுக்கு ஆப்கானிஸ்தானில் இருந்துவரும் இடையூறுகளை முற்ருக அழித்துவிடுவதற்கே [illegible] டுள்ளனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளையில் ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலை முழுமையாக கைப்பற்றியுள்ள சோவியத்யூனியன் துருப்புக்கள் [illegible] வருவதாகவும் [illegible] முன்னுள் ஜனதிபதி அமினின் ஆதரவுப் படைகளுக்கும் சோவியத் துருப்புக்களுக்கும் பலத்த சண்டைகள் இடம் பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தற்பொதுள்ள 40 ஆயிரம் சோவியத் துருப்புக்களுடன் மேலும் தயாராக உள்ள 12 ஆயிரம் துருப்புக்களும் அனுப்பப்பட்டால் அங்குள்ள அமினின் ஆதரவுப் படைகளை முழுதாக அழித்துவிடலாம் என்று சோவியத்யூனியன் நம்புவதாகவும் தெரிய வருகிறது. (கு)

## பாடசாலை நேரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பாடசாலைகள் காலை 8 மணிக்கு ஆரம்பித்து மாலை மூன்று மணிக்கு மூடப்படுமெனத் தெரியவருகிறது.

அரசாங்க அலுவலகங்களுக்கான புதிய அலுவலக நேரங்கள்அமுலுக்கு வரும் வேளையில் மாலை 3-30 க்கு பாடசாலைகளையும் மூடினுல் போக்கு வரத்து நெருக்கடி ஏற்படுமென்ற காரணத்தினுலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டமுடிவை எடுத்துள்ளார். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-30, 4-30, 7-00 & 9-30 P. m.

Your last chance to re-live the greatest moments of movie musical magic...

Fred Astare · Gene Kelly · Erank Sinatra
Bing Crosby · Clark Gable · Spencer Tracp
Katherine Hepburn · Judy Garland
The Marx Brothers Laurel & others...

**That's Entertainment Part-2**

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறது!

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த

**அந்தமான் காதலி**
(வர்ணப்படம்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி: 10.30, பி.ப. 2.30, 6.00, 9.30
சிவாஜி, ஜெயலலிதா ஜி.வரலட்சுமி நடித்த
(புத்தம்புதிய பிரதி)
**தாய்!**

100-வது வெற்றித்திருநாளை நோக்கி

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30 6-30, 9-45
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம்.ஆர்.ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி நடித்த

**டாக்ஸி டிரைவர்**
வண்ணத்திரையோவியம்

A Hilari us Action Comedy Film For All Ages

**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15 4-45, 7-15 & 9-45 p.m.

Terrence Hill Bud Spencer Team up As A Pair Of Miami Beach Combers Donning The Police Uniform Go About Busting Cars And Crooks In Warner Brothers Presentation

**CRIME BUSTERS**

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி

**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன்-சுஜாதா நடித்த
(வெள்ளிவிழாச் சித்திரம்)
**தீபம்**
(வர்ணக்கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்

**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**பாலாடை**
7-1-80 முதல் **பந்தாட்டம்**

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
**வெள்ளிக்கிழமை விரதம்**

# இன்றைய பலன்

*மார்கழி மாதம் 21-ம் திகதி சனிக்கிழமை 5-1-1980*

மேடம்: தொழில் புரியும் இடத்தில் அந்தஸ்த்து உயர்வதற்கிடமுண்டு. அறவழியின் மூலம் ஆதரவு பெருகும். வரவேற்க வேண்டிய தினம்,

இடபம்: புதுத்தொழிலில் முதலீடு செய்வதற்கு உகந்த தினம். சகோதரபாசம் பொங்கும். மகிழ்ச்சிதரும் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

மிதுனம்:- கடந்தகாலச் சம்பவம் ஒன்று மனதுக்கு வேதனை தரும். கடமையில் தளர்ச்சி காணப்படும். நிம்மதியற்ற தினம்.

கடகம்:- அதிக அலைச்சலால் அவதிப்படுவீர்கள் வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். மன அடக்கம் விரும்பத்தக்கது.

சிங்கம்:- அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமேற்படலாம். வாழ்க்கையிலும் சுமுகமான நிலை தென்படும் சிநேகிதவழியால் மகிழ்ச்சியுண்டு.

கன்னி:- சிந்தனை அலைகளால் தாக்கப்படுவீர்கள். போட்டிவிபரங்களை தவிர்த்துக்கொள்ளவும். தொழில் துறையில் பொறுமை நன்று.

துலாம்:- நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகும். பொருளாதாரத்துறையிலும் முன்னேற்றமுண்டு. சிறப்பான தினம்.

விருச்சிகம்:- கைத்தொழில் புரிவோருக்கு கணிசமான நாள். தன்நம்பிக்கையுடன் இல்லத்திலும் இனிமை தவழும் புத்திர பெருமையும் உண்டு.

தனுசு:- நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படும். திகைக்க வைக்கும் சம்பவம் ஒன்றும் இடம் பெறலாம் சமயோசித புத்தி நன்று.

மகரம்:- காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும் களஸ்திர வழித்தனவரவுக்கிடமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

கும்பம்:- குடும்பத்தில் குறை கேட்க நேரிடலாம் பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும். மனத்தளர்ச்சிக்கிடமளியாது நடக்கவும்.

மீனம்:- செயலாற்றுவதில் புதிய உற்சாகம் பிறக்கும். சிலர் வாழ்க்கையில் பொதுசனத்தலைமைக்குமிடமுண்டு. தந்தை வழி ஆதரவும் தாராளமாய் கிடைக்கும்.

திருமலை
க.வேலுப்பிள்ளை

## நாடும் நடப்பும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்கள் இனிமேல் பொருட்களை வாங்கும்போது கவனித்து புதுரக பொருட்களை வாங்குவார்கள் எனவும் எதிர்பார்க்கலாம்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு இது சமர்ப்பணம்.

– ஊர்சுற்றி

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
**வல்லவன் ஒருவன்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
[illegible]

# "பாடப் புத்தகத்தை விட திட்டம்தான் முக்கியம்"

–ஜூசைதாசன்

(மன்னார்)

''மன்னார் மாவட்டத்தில் உள்ளவர்களில் அநேகர் வறியவர்கள், இவர்கள் தமது பிள்ளைகளுக்கு புத்தகம் வாங்கிக்கொடுக்கமுடியாது கஷ்டப்படுகிறார்கள். பாடசாலைக்கு வேண்டிய பாடப்புத்தகங்கள் இல்லாது மாணவர்கள் படிக்க முடியாது. ஆதலால் இத்திட்டம் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு வரப்பிரசாதமே''

இலவச பாடநூல்கள் வழங்குவது தொடர்பாக இங்கு நடைபெற்ற பாடசாலை அதிபர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மன்னார் எம். பி. திரு. ஜூசைதாசன் மேற்கண்டவாறு கூறினார் இம்மகாநாட்டில்கல்வி சேவைகள் அமைச்சரும்கலந்து கொண்டார்.

மன்னார் எம், பி. மேலும் கூறியதாவது:

''பாடப்புத்தகங்களை விட பாடத்திட்டம்தான் முதலில் முக்கியம். ஒவ்வொரு அரசாங்கமும் மாறி மாறி வரும் போது பாடத்திட்டங்களையும் அடிக்கடி மாற்றியமைக்கிறது. இது மாணவர்களுக்குப்பெரும் இடையூறுகளை ஏற்படுத்துகிறது. ஆதலால் பாடத்திட்டங்களை அடிக்கடி மாற்றியமைக்காது நிலையானபாடத்திட்டத்தை வகுத்து மாணவர்களுக்கு உதவிபுரியவேண்டும்

''ஒரு பயிருக்கு 14ம் நாளில் போடும் உரத்தை 26ம் நாள் போட்டால் அது எப்படிப் பயன்தராதோ அதேமாதிரி காலம்பிந்தி வெளிவரும் பாடப்புத்தகங்களால் மாணவர்களுக்கு நன்மையிருக்காது! ஆதலால் இலவச பாடப்புத்தகங்களை நேரகாலத்தோடு வழங்கவேண்டும்.'' (ஞ)

......

## குடும்பத்திட்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு யாழ். தொழில் அதிகாரி திரு. க. சிவப்பிரகாசம் யாழ். பல்தொழில் நுட்பக்கல்லூரியில் ஆசிரியர்களுக்கான தொழிற்திணைக்களம் - தொழிலாளர் கல்வி ஸ்தாபனம் என்பவற்றால் நடாத்தப்பட்ட ''மக்கள் தொகையும் - குடும்பத்திட்டமும் என்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ். சிரேஷ்ட தொழில் அதிகாரி திரு. ச. யோகராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. க. சிவப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில், குடும்பத்திட்டக் கருத்தரங்குகள் நாட்டின் பல பகுதிகளில் பலமொழிகளில் நடாத்தப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் எம்மை எதிர்த்த பல கிராமமக்கள் இன்று எம்மை அழைத்து கருத்துக்களைக் கேட்கவும் குடும்பத்திட்ட நடைமுறைகளைக் கைக்கொள்ளவும் தொடங்கியுள்ளனர், கிராமமக்களோடு தொடர்புள்ளவர்களாகச் சேவையாற்றும் ஆசிரியர்கள் குடும்பத்திட்டத்தில் முன்மாதிரியாக விளங்குவதுடன், தாம் சேவை செய்யும் கிராமமக்களிடையே மக்கட்தொகைப் பிரச்னையால் உண்டாகும் நன்மை தீமைகளை விளக்கவேண்டும்'' என்று குறிப்பிட்டார். (அ)

## கைலாசபதியின் "சமூகவியலும் இலக்கியமும்"

(யாழ்ப்பாணம்)

ஐந்து திறனாய்வுக் கட்டுரைகளடங்கிய 'சமூகவியலும் இலக்கியமும்'' என்றதொகுப்பு நூல் சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட்லிமிட்டெட் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலிலடங்கியுள்ள கட்டுரைகளின் சிற்சில பகுதிகள் இளங்கதிர், இளந் தென்றல், சிந்தனை, கற்பகம், தாயகம், வசந்தம், மக்கள்செய்தி ஆகிய இதழ்களிலும், சிறப்பு மலர்கள் சிலவற்றிலும் வெளிவந்துள்ளன.

பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவருக்கும், பாடசாலை ஆசிரியர்களுக்கும், தமிழ் மீது அக்கறையுள்ள எவருக்கும் நல்விருந்தாக அமையத்தக்க இந்நூலினூடே ''நுண்நோக்கிலான ஆராய்ச்சி நெறி முறையை'' அனைவரும் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறலாம்.

......

## மாவட்ட நீதிபதி

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. வி. விக்னேஸ்வரன் சாவகச்சேரி, மாவட்ட நீதிபதியாகப் பதவியேற்றுள்ளார். முன்னர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவிருந்த திரு. இ. பாலசிட்ணர் யாழ் மாவட்ட நீதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 503

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
267, யூனியன்பிளேஸ், கொழும்பு 2. **வாதிகள்**

எதிராக

பொன்னர் சின்னத்துரை, பலாலி, காங்கேசன்துறை.
பிரதிவாதி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் M B 503-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 20,295/- பின் 23-1-75 தொடக்கம் 7-5-76 வரைக்கும் ரூபா 20,295க்கு 7% வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 733 சதம் 85. இதில் ரூபா 3,700 - கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்


வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோவிற்பற்று பலாலி இறை ''கரைபான் சீமா'' நிலப்பரப்பு இரண்டோடு எட்டில் ஏழு (நில. பர. 2 8 7) எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை பெண் சிவகாமியினதும் பங்காளரினதும் ஆதனம் வடக்கும், மேற்கும் ஒழுங்கை தெற்கு முத்தன் இளையகுட்டியினதும், பங்காளரினதும் ஆதனம். மயிலிட்டி கிராமச் சங்கத்தின் வரிமதிப்பீட்டு எண் 32 கொண்டதும் யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் ச் 300/154ல் பதியப்பட்டதுமான ஆதனம் இதடங்கலும்.

''விதானை வளவு''
சித்தன்கேணி.
19-11-79

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.
4567

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...



டில்கா வாச் வேக்ஸ்
. பஸ் நிலைய எதிர் மேல்மாடி .
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு The EELANAADU 50 சதம்

# வால்ட்ஹெய்மை சந்திக்க கொமெய்னி மறுப்பு

தெஹ்ரான், ஜன. 4

அமெரிக்க பணயக்கைதிகளை விடுவிப்பது குறித்து ஈரான் அதிகாரிகளுடன் பேச்சுநடத்துவதற்கு தெஹ்ரான் வந்திருந்த ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்மைச் சந்திக்க ஈரானிய சமயத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி மறுத்து விட்டார்.




நிக்கோவுக்கு வேறு கிளை இல்லை

# லீவு குறைப்பை எதிர்த்து ஜனாதிபதிக்கு மகஜர்

## அரச அலுவலகங்களில் கையெழுத்து வேட்டை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியரின் லீவுகள் 21 தினங்களாகக் குறைக்கப்பட்டதற்கு ஆட்சேபம்தெரிவித்து ஜனாதிபதிக்கு கையெழுத்துப் பெட்டீசங்கள் அனுப்பப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு அரசாங்க காரியாலயங்களிலும் தற்பொழுது இந்தப் பெட்டீசத்தில் அரசாங்க ஊழியர்களிடமிருந்து கையெழுத்து சேர்க்கப்பட்டு வருகிறது.

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் இந்தப் பெட்டீசம் எழுதப்பட்டுள்ளது.

இந்தப் பெட்டீசத்தில் "பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைமூலம் அரசாங்க ஊழியரின் வருடாந்த லீவை 21 நாட்களாகக் குறைத்ததை நாங்கள் வன்மையாகக் எதிர்க்கிறோம்" என எழுதப்பட்டிருக்கிறது.

இது ஸ்தல ஸ்தாபன அரசாங்கக் கூட்டுத்தாபன மற்றும் வங்கிகள் போன்ற ஏனைய துறைகளையும் பாதிக்கும் என்றும் அப்பெட்டீசத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கையை வாபஸ்பெற்று தொழிலாளர் அனுபவித்துவந்த லீவுகளைத் தொடர்ந்தும் வழங்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு, வவனியாவில் வெளிக்கள ஆய்வு வேலைகள்

(வவனியா)

நிதி, திட்டமிடல் அமைச்சின் ஏற்பாட்டின் பேரில் மேற்கு ஜெர்மனியிலிருந்து ஜெர்மன் அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் உயர்மட்டக் குழுவொன்று அண்மையில் வவனியா, முல்லைத்தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்தது.

இக்குழுவினர் இப்பகுதிகளில் வெளிக்கள ஆய்வு வேலைகளில் ஈடுபட்டனர். மீன்பிடி, பண்ணை அபிவிருத்தி சம்பந்தமான விபரங்களை அவர்கள் இங்கு சேகரித்தனர்.

இக்குழு இப்புள்ளிவிபரங்களைக் கொண்டு தனது இறுதி அறிக்கையை மார்ச் ஏப்ரல் மாதங்களில் நிதிதிட்டமிடல் அமைச்சிடம் கையளிக்கும்.

(வெ)

# இளம் பெண் தற்கொலை

(உரும்பராய்)

தன் கணவன் ஏற்கனவே திருமணமானவர் என்றசெய்தியை அறிந்த இளம் மனைவி ஏமாற்றம் தாங்காது கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இப்பரிதாப சம்பவம் உரும்பராய் தெற்கில் நடைபெற்றது.

ஏற்கனவே திருமணமாகி குழந்தைகளையும் உடைய ஒருவர் தான் திருமணமான விடயத்தையும், தனக்கு பிள்ளைகள் உண்டு என்ற விபரத்தையும் மறைத்து உரும்பராயைச் சேர்ந்த மேற்படி இளம் பெண்ணை சில மாதங்களுக்கு முன் திருமணம் செய்திருந்தார்.

திருமணமாகி 6 மாதத்தில் கணவன் முன்னர் திருமணமாகி பிள்ளைகள் உண்டென்பதை அறிந்த இளம்பெண் மனவேதனையடைந்து, கேகாலையிலுள்ள தனதுகணவனுக்கு கடிதம் எழுதிவிட்டுதற்கொலை செய்து கொண்டதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணையை யாழ். திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் நடத்தி தற்கொலை தீர்ப்பளித்தார்,

(கொ)

# திடீர் இடமாற்ற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த உத்தியோகத்தர்களுக்கும், இடமாற்ற ரத்து அறிவித்தல் கிடைத்ததாகவும், ஆனால் அவர்கள், வரவு இடாப்பில் கையெழுத்திடவும், காரியாலயத்தில் கடமையாற்றவும், அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் ஒருவர் தெரிவித்தார்.

**கேள்விமேல் கேள்வி**

மீண்டும் கொழும்பிற்குச் சென்று வாடகைவீடு எடுக்க முடியுமா? பிள்ளைகளுக்கு பாடசாலையில் இடம் எடுக்க முடியுமா? என்று ஒருவர் கேள்வி எழுப்பினர்!

ஆயிரம், இரண்டாயிரம் ரூபா அன்பளிப்பாக கொடுத்தாலும் கொழும்பில் ஒரு சிறு அறை கூட எடுக்க முடியாதென்றும், நண்பர் அல்லது உறவினர் வீட்டில், எத்தனை நாட்களுக்குத்தான் நிற்கமுடியும் என்றும் மற்றொருவர் கேட்டார்.

இரண்டு கிழமைக்கு முன்னர் இந்த இடமாற்ற ரத்து உத்தரவு கிடைத்திருந்தால், ஏதாவது செய்திருக்கலாமென்றும் இன்றுள்ள நிலைமையில் எதுவுமே செய்யமுடியாதென்றும் அவர்கள் சொன்னார்கள்.

பெரும்பாலானவர்கள் கொழும்பில் வாழ்ந்தவர்கள். சிலர் 20 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரைஅங்கு வாழ்ந்ததாகவும் கூறினர்கள்.

கொழும்பிலிருந்து தாங்கள் விடுவிக்கப்பட்டு. இங்கு வந்து பொறுப்பேற்றபின், இந்நிலை ஏற்பட்டதாகவும், தாங்கள் இப்பொழுது 'அகதி' களாக இருப்பதாகவும் சிலர் கவலை தெரிவித்தனர்.

"காலை முதல் மாலை 4-15 மணிவரை இந்த மண்டபத்திற்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருப்பதுதான் வேலை" என்று ஒருவர் அழாக்குறையாகச் சொன்னர்!

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்களைச் சந்தித்து நிலைமை பற்றிஅறிந்ததாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

# லீவு குறைப்பை ஆட்சேபித்து கதவடைப்பு இயக்கம்

(யாழ்ப்பாணம்)

லீவுகளை 21 நாட்களாக குறைத்ததை ஆட்சேபித்து இம்மாதம் 8ம் தேதிமுதல் 11ம் தேதிவரை நாடுமுழுவதும் உணவு இடைவேளையில் கதவடைப்பு இயக்கம் நடத்துவதென கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கைக் குழு தீர்மானித்துள்ளது,

அரசாங்க லிகிதர்சேவைச் சங்கதலைமைக்காரியாலயத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில்கீழ்க்காணும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

லீவுகள் குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வது.

கதவடைப்பு இயக்கம் தொடர்பான ஒழுங்குகளை செய்ய அரசாங்க லிகிதர் யாழ். கிளையினர் இம்மாதம் 7ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடுகின்றனர்.

(க)

# தனியான இடாப்பில் கையொப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விக்கந்தோருக்கு இடமாற்றம் பெற்றுவந்தவர்கள் புறம்பான இடாப்பில் கையெழுத்திட அனுமதிக்கப்பட்டிருப்பதாக வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இ. மாணிக்கவாசர் நேற்று தெரிவித்தார்.

இவர்கள் நிலைபற்றி மேலிடத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினர்.

(க)

# பொன்னாலையில் பயிற்சி நிலையங்கள்

(பண்டத்தரிப்பு)

பொன்னாலை கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றும், கைத்தறி நெசவு நிலையம் ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தையல் பயிற்சி நிலையத்திற்கென மூன்று தையல் மெஷின்களை கிராம அபிவிருத்தி அமைச்சு அண்மையில் கொழும்பிலிருந்து இங்கு அனுப்பிவைத்துள்ளது.

எச்சரிக்கை!

பெனின்சுலா குறூப் ஒவ் கம்பெனிகள்
25, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
★ பெனின்சுலா கிளாஸ் வேர்க்ஸ் அன்ட் இன்டஸ்றீஸ் ★ பெனின்சுலா ஏஜன்ஸீஸ்
★ பெனின்சுலா சோப் இன்டஸ்றீஸ் (நாவற்குழி) ★ பெனின்சுலா ட்ரேட் சென்ரர் (யாழ். பஸ்நிலையம் முன்பாக)

மேற்குறிப்பிடப்பட்ட கம்பெனிகளைத்தவிர, பெனின்சுலா என்ற பெயரில் உள்ள வேறு எந்தக் கம்பெனிகளுக்கும் எமக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பதை பொதுமக்களுக்கு அறிவித்துக்கொள்கின்றோம்!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org